6 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

87. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (துணைத் தலைவர்தேர்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35-1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

88. அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தாலூகாவைச் சார்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 1985 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ம் நாளிட்ட 883 ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

89. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 1985ஆம் ஆண்டு சூலை திங்கள் 2 ம் நாளிட்ட 1592 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1939 ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4 /1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

90. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1982–83ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4-1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

91. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1984–85ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

எதுவுமில்லை.